15-1-1994

# சூரியகந்த விவகாரம் ஐ. நா. கவனத்திற்கு சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட இரகசிய புதை குழிகள் விவகாரம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடாத்துவதனை உறுதிப்படுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் அமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பாகவும் சடலங்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 2 இதழ் 333
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15-1-1994

## கொலையாளிகளை நீதிமன்றில் நிறுத்த வேண்டும்

(கொழும்பு)

சூரியகந்த படுகொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் நீதிமன்ற விசாரணையின் முன் அரசினால் நிறுத்தப்படவேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் அமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

1989/90ம் ஆண்டு காலப் பகுதிகளில் எம்பிலிப்பிட்டிய பகுதியில் காணாமல்போன சுமார் 300 பேர் கொலை செய்யப்பட்டிருக்

4ம் பக்கம் பார்க்க

# அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட இல. தமிழரை திருப்பி அனுப்ப சுவிஸ் ஒப்பந்தம் கைச்சாத்து!

(கொழும்பு)

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ள இலங்கைத் தமிழர்களில் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பான ஒப்பந்தம் ஒன்று இலங்கை - சுவிஸ் அரசுகளுக்கிடையில் அண்மையில் கைச்சாத்தானது.

வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் ஸ்ரீலங்கா அரசின் சார்பிலும் கொழும்பிலுள்ள சுவிஸ் நாட்டுத் தூதுவர் வல்கிளமன் டேவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதே வேளையில் சுவிற்சர்லாந்து நாட்டுக்குள் சட்டவிரோதமாக புகுந்தபின் அங்கு அரசியல் தஞ்சம்கோருவோரை கட்டுப்படுத்த கடுமையான சட்டங்களை சுவிஸ் அரசு கொண்டுவந்துள்ளது.

இந்தப் புதிய விதிமுறைகள் காரணமாக விரைவில் 50 இலங்கைத் தமிழர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால் அவர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவது சம்பந்தமாக இலங்கைக்கும் - சுவிற்சர்லாந்துக்குமிடையில் அண்மையில் கொழும்பில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

புதுச்சட்டத்தின் பிரகாரம் 1992ம் ஆண்டு தைமாதம் 1ம் திகதியின் பின், சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியவர்களில் பெரும்பாலானோர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட இருக்கிறார்கள்.

இவர்களில் பலர் பொருளாதார தஞ்சம் கோரியவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நான்கு தமிழ் இளைஞர் கைது

(திருமலை)

திருமலை தம்பலகாமம் பகுதியை சுற்றி வளைத்த படையினர் அங்கிருந்து நான்கு தமிழ் இளைஞர்களை கைது செய்து முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

முத்துலிங்கம் தம்பித்துரை, தவராசா ராஜன், வைரமுத்து ஸ்ரீகுமார், வைரமுத்து ஒப்பிலாமணி (வயது 22) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். (அ)

## தேசவிரோத குற்றத்திற்கு மரண தண்டனை

(மன்னார்)

தேசவிரோத குற்றமிழைத்த நபர் ஒருவருக்கு மன்னார் பண்டிவிரிச்சானில் நேற்று முன்தினம் மாலை 5-10 மணியளவில் விடுதலைப் புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

மடுக்குளம் வேளாண் குலத்

(4-ம் பக்கம் பார்க்க

## திருமலை ஆஸ்பத்திரியில் வைத்தியர் பற்றாக்குறை

(திருமலை)

திருமலை மாவட்ட வைத்திய சாலைகளில் வைத்தியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கண் சிகிச்சைப் பிரிவிலேயே வைத்தியர் பற்றாக்குறை அதிகம் காணப்படுவதாகவும் இதனால் நோயாளிகள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இவ் வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு பெரும் தட்டுப்பாடு

(2-ம் பக்கம் பார்க்க)

## ஊழியர் நஷ்டஈடு சட்டத்தில் விரைவில் திருத்தம் வரும்

(கொழும்பு)

அரசாங்க கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான புதிய சட்டத் திருத்தம் விரைவில் அமுல்படுத்தப்பட இருப்பதாக அரசு நேற்று அறிவித்தது.

இப்புதிய சட்டத் திருத்தத்தின்படி ஒரு ஊழியர் வேலை நேரத்தில் காயமடைந்தாலோ அல்லது காயமடைந்தாலோ அவர் நஷ்டஈடுக்கு விண்ணப்பிக்கலாம்.

ஊழியர் ஒருவர் தமது சேவையிலிருந்து ஓய்வு பெற்று இர

(4-ம் பக்கம் பார்க்க)

மோசடியைத் தடுக்க

## 'லேசர்'முறையில் தயாரான அ. அட்டைகள் விநியோகம்

(கொழும்பு)

இலங்கையர் அனைவருக்கும் விரைவில் புதிய தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுமென்று ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிதாக வழங்கப்படவிருக்கும் தேசிய அடையாள அட்டையில் எந்த ஒரு மோசடி வேலைகளும் செய்ய முடியாதபடி அவை "லேசர்" தொழில் நுட்ப முறை மூலம் தயாரிக்கப்படவுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் 22-ம் ஆண்டு நிறைவை யொட்டி நேற்று முன்தினம்

(2ம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டை நேற்று ஹெலி வட்டமிட்டது

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினமான நேற்று தென்மராட்சி, நீர்வேலி, வடமராட்சி பகுதிகளை சுற்றி ஹெலிகொப்டர் ஒன்று பல தடவை வட்டமிட்டது.

இதன் காரணமாக அப்பகுதிப் பொதுமக்கள், மற்றும் வீதியால் பயணம் மேற்கொண்டோர் பலரும் பதற்றமடைந்து பாதுகாப்பு தேடிக்கொண்டனர்.

ஆனால் தாக்குதல்கள் எது

(2-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு பல்கலைக்கழக மாணவர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டக்களப்பு செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை வவிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்குப் பகுதி மாணவர்கள் காலை பல்கலைக்கழகத்தில் 8 மணியளவிலும், வடமராட்சி பகுதி மாணவர்கள் 2-30 மணியளவில் கொடிகாமம் பஸ் நிலையத்திலும் சமூகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## தேர்தல் வாக்குப்பெட்டிகள் மோசடி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தலின் போது தேர்தல் வாக்குப் பெட்டிகள் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளுடன் மோசடி செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

வடமத்தியமாகாணத்தில்

# 212 ஆங்கில ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் 212 ஆங்கில உதவி ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இந்நியமனம் இடம்பெறவுள்ளதாம்.

1991-ம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தி எய்தியவர்களுக்கே இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை பொலநறுவையில் நியமிக்கப்பட்ட 110 உதவி ஆசிரியர்கள் நேற்று தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

மேலும் அனுராதபுர மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட 102 உதவி ஆசிரியர்கள் தமது நியமனக்கடிதங்களை இன்று பெற்றுக்கொள்ளவுள்ளனர். —கே- இ

மத்தியமாகாண சபையின்

# முதலமைச்சர் மீது மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

மத்திய மாகாண முதலமைச்சர் மற்றும் அதன் தலைவர் ஆகியோர் மீது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ம் திகதி இரு தனித்தனி நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை கொண்டு வரவுள்ளதாகவும், அன்றைய தினம் ஆளுநரால் நிகழ்த்தப்படும் நன்றி தெரிவிக்கும் உரையும் தோற்கடிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சிகள் கூட்டாக தெரிவித்துள்ளன.

இதேவேளை கடந்த டிசம்பர் மாதம் முதலமைச்சர் மற்றும் தலைவர் ஆகியோருக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக முதலமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் விசாரணையின்றியே தோற்கடிக்கப்பட்டமையும் தெரிந்ததே.

மேலும் தலைவர் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது அன்றைய தினமே ஆளுநர் மாகாணசபைக் கூட்டத்தை பெப்ரவரி 17ம் திகதிக்கு ஒத்திவைத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க இ)

# கல்வியின் வளர்ச்சியிலேயே எமதுவளர்ச்சி தங்கியுள்ளது

## -அருட்திரு பிரான்சிஸ் யோசப் அடிகள்

(யாழ்ப்பாணம்)

இன்றைய சூழ்நிலையில் கல்வி எமக்கு மிக முக்கியமானதொன்றாகும். கல்வியை நாம் எவ்வளவுக்கு வளர்க்கின்றோமோ அவ்வளவுக்கு எமது சமுதாயம் வளரும், எமது நாடு வளரும், எமது பொருளாதாரம் வளரும், இதற்காக நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நிதியம் ஆரம்ப விழாவுக்குத் தலைமைதாங்கி உரையாற்றிய அருட்திரு பிரான்சிஸ் யோசேப் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த விழாவில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன் ஏற்றி வைத்தார்.

யாழ் தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் செல்வி தி பெரியதம்பி, யாழ். வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. க. சந்தசாமி ஆகியோர் மங்கல விளக்கை ஏற்றிவைத்தனர்.

அருட்திரு. பிரான்சிஸ் ஜோசப் அடிகள் உரையாற்றுகையில் கூறியதாவது:

எமது பல்வேறு வகைப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு கல்வி முக்கியமானதாகும். எமது நோக்கம் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்பதே.

இதற்காக பெற்றோர்கள் தாராளமாக உதவவேண்டும். நாம் எல்லோரும் இந்த வேளையில் தியாக உணர்ச்சியுடன் செயல்படவேண்டும் என்றார். பாடசாலைகள் இடிந்து விழுகின்றன

வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் க. சந்தசாமி உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் பாடசாலைகளில் தளபாட பற்றுக்குறைகள் உண்டு பாடசாலைகள் இடிந்து விழுகின்றன இந்த நிலையில் எமது மாணவர்கள் மரநிழலின் கீழ் நிலத்திலிருந்து கல்வியைத் தொடர வேண்டிய ஒரு சூழ்நிலை உண்டு.

இதை நிவர்த்திசெய்ய எமது பெற்றோர்கள் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நிதியத்துக்கு தாராள சிந்தனையுடன் உதவி வழங்க வேண்டும் என்றார்.

தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கல்வி மேம்பாட்டுப் பேரவை நிதியத்தை ஆரம்பித்து வைத்தார்.

பல பெற்றோர்கள், நலன் விரும்பிகள், கல்லூரிகள், வர்த்தக ஸ்தாபனங்கள், பழைய மாணவர் சங்கங்கள் இந்த நிதியத்துக்கு நன்கொடை வழங்கினார்கள். -162-இ

# தென்தமிழீழ மக்களுக்கான வீடமைப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால இராணுவ நெருக்கடிகளால் தென்தமிழீழத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு வந்துள்ள 25 குடும்பங்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

குடும்பங்களுக்கான தற்காலிக வதிவிடங்களை அமைத்துக் கொடுப்பதுடன், அவர்களுக்கான சமையல் பாத்திரம், உடுபிடவைகள் என்பவற்றையும் வழங்கி சுயதொழில் முயற்சி கான ஒழுங்குகளையும் செய்துள்ளது. —இ

# சைக்கிள் திருட்டு

(ஆனைப்பந்தி)

வீட்டிற்கு வெளியே பூட்டி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் திருட்டுப்போயுள்ளது.

அ. ஜேசுபேல் என்பவரது ஈஸ்ரன் சைக்கிளே திருட்டுப் போயுள்ளது. வெளியே சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டிற்குள் இருந்து கதைத்துக் கொண்டிருக்கையில் சைக்கிள் திருட்டுப்போயுள்ளது. (101)

ஊழியர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டு வருடங்களுக்குள் அவர் நோய்வாய்ப்பட்டாலும் அந்த ஊழியரும் நஷ்ட ஈட்டுக்கு விண்ணப்பிக்கலாம்.

கடந்த காலங்களில் ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதில் பெரும் சிக்கல்கள் இருந்தமையினாலேயே இந்த புதிய சட்டதிருத்தம் கொண்டுவரப்பட இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி இ)

சூரியகந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பாகவும் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் விசேஷ நிபுணர்கள் விசாரணைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் அமைப்பு சூரியகந்த விவகாரம் தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. —இ

தேர்தல் வாக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கட்சியினரே இது சம்பந்தமான முறைப்பாட்டை தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பித்துள்ளனர்.

தேர்தல் வாக்களிப்பின் போது பாவிக்கப்படும் வாக்குப் பெட்டிகள் அரசாங்கத் தொழிற்சாலைகளிலேயே தயாரிக்கப்படுவது நடைமுறையாக இருந்துவருவது ஒன்று.

ஆனால் கடந்த காலத்தில் நடத்தப்பட்ட தேர்தல்களில் அரசாங்க தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படாத சுமார் 60 வாக்குப் பெட்டிகளும் பயன்படுத்தப்பட்டதாக எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளன.

தேர்தல் வாக்குப் பெட்டிகளை திருத்தியமைப்பதற்காக அரசாங்க தொழிற்சாலைக்கும் கொண்டுவரப்பட்டபோதே இந்த மோசடி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தலைமையில், கேணல் அனுருத்த ரத்வத்த, தர்ம சிறிசேனநாயக்க, எஸ். பி. திஸாநாயக்க ஆகியோர் அடங்கிய குழு ஒன்று தேர்தல் ஆணையாளரை சந்தித்து இது சம்பந்தமான விபரங்களைத் தெரிவித்துள்ளது. இ

மொனறுகல காட்டில்

# கஞ்சா செடிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மொனராகலைக் காட்டில் 15 கோடி ரூபா பெறுமதியான கஞ்சாச் செடிகளை கண்டெடுத்து அவற்றை அழித்துவிட்டதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அன்ரன் வி. ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்டத்திலுள்ள தனமல்வில அடர்ந்த காட்டின் நடுப்பகுதியில் 50 ஏக்கர் நிலத்தில் கஞ்சா பயிரிடப்பட்டது கண்டு பிடித்தது.

50 பேர் கொண்ட பொலிஸ் கோஷ்டியொன்று இக்காட்டுப் பகுதிக்குள் 20 கிலோமீற்றர் தூரம் மிகச் சிரமங்களின் மத்தியில் நடந்து சென்று 6 நாட்கள் இப்பகுதியில் தங்கியிருந்து இக்கஞ்சாப் பயிர்களை கண்டு பிடிக்கப்பட்டன.

இது சம்பந்தமாக 5 பேர் கைது செய்யப்பட்டதுடன் கஞ்சாச் செடிகளும் தீயிட்டு முற்றாக அழிக்கப்பட்டன.

இலங்கையில் கடுதலாக மொனராகலை, அம்பாறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள அடர்ந்த காடுகளின் நடுவில் வருடாந்தம் சுமார் ஆயிரம் ஹெக்டேயர் கஞ்சாச் செடிகள் பயிரிடப்படுவதாகதற் போது தகவல்கள் கிடைத்துள்ளன என்று திரு. ஜெகநாதன் தெரிவித்தார். (வி-இ)

அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களாவர். ஒரு லட்சத்து 40 ஆயிரம் இலங்கையர் தற்போது சுவிட்சர்லாந்தில் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளார்கள்.

இதேநேரம் சுவிட்சர்லாந்திலிருந்து இலங்கை திரும்புவோர் சட்டப்படி ஏதேனும் குற்றம் இழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுமென்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. —வி-இ

கொலையாளிகளே

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாம் எனவும் அவர்களின் மனித எலும்புக்கூடுகளே குறிப்பிட்ட பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கலாம் என்பதும் தெரிந்ததே. (இ)

# இடம்பெயர்ந்த அரச ஊழியர்க்கு சம்பளம் வழங்க முடிவு

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வட-கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம் பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு அவர்களது சம்பளங்கள் விரைவில் வழங்கப்படுமென்று அரசு நேற்று அறிவித்தது.

மேற்படி பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த அரச ஊழியர்கள் தமது சம்பளங்களை இதுவரை பெறுதிருந்தால், தாம் வேலைசெய்த இலாகாக்களின் ஊடாக உடனடியாக அதற்கு விண்ணப்பிக்கும்படி அரசு அறிவித்துள்ளது. -வி-இ

தேசவிரோத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சேர்ந்த சாமுவேல் ஆறுமுகம் அல்லது இரத்தினம் (வயது 37) என்பவருக்கே மரண தண்டனை வழங்கப்பட்டது.

வவுனியாவில் 'புளொட்' மற்றும் இராணுவத்தினருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த இவர் விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய தகவல்களை படையினருக்கு வழங்கியதோடு 10 ஆயிரம் ரூபா பணத்தையும் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவருடைய குற்றச் செயல்கள் மக்கள் முன் வாசிக்கப்பட்டு மேற்படி தண்டனை வழங்கப்பட்டது. -க

# 4 மாத குழந்தை தவறி விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

தாயின் கையிலிருந்த நாலு மாதப் பெண் குழந்தை தவறிக் கீழே விழுந்ததால் மரணமடைந்துள்ளது. இக்குழந்தையின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் நாவடியைச் சேர்ந்த தங்கராணியின் குழந்தையே மரணமானதாகும்.

சடலம் விசாரணைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

## இறைச்சிக்கடைகள் மூடப்பட்டிருக்கும்

(யாழ்ப்பாணம்)

இன்று பட்டிப்பொங்கல் தினத்தையொட்டி யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் இறைச்சிக் கடைகள் யாவும் மூடப்பட்டிருக்குமென யாழ் மாநகரசபையின் சுகாதாரப் பணிமனை அறிவித்துள்ளது. (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B